Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 57/2026**

வழக்கு சாட்சி எண். PW5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கமலா | கிராமம் | : | மோப்பிரிபட்டி |
| கணவர் பெயர் | : | நாச்சிமுத்து | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 80 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர்).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28**th** Day of **July 2026.**

**முதல் விசாரணை**

நான் மோப்பிரிப்ட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும்.

சுமார் ஒரு மாததிற்கு முன்பு நான் என் வீட்டில் தூங்கி கொண்டு இருந்த போது, ஆஜர் எதிரி என் நெஞ்சின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு எனது வாயை பொத்தி இரண்டு காதிலும் இருந்த தங்க கம்மலை கலட்டி எடுத்து கொண்டு போய் விட்டார். பின்னர் எனது பேரன் சுந்தரராஜன், எனது மகள் சாந்தி ஆகியோரிடம் மேற்படி நபர் கம்மலை திருடிக்கொண்டு சென்ற விவரத்தை கூறினேன். மேற்படி திருடி சென்ற நபர் சிவப்பு நிற பணியன் மற்றும் கட்டம் போட்ட லுங்கி அணிந்து இருந்தார் என்று எனது மகள் மற்றும் பேரனிடம் அடையளம் கூறினேன். வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ நேரம் இருள் சூழ்ந்த நேரம் என்றால் சரிதான். அப்போது ஒருவரை ஒருவர் பார்க்கமுடியாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எதிரி என் வாயை போத்தியதாகவும், என் நெஞ்சின் மீது ஏறி உட்கார்ந்து இருந்தார் என்று சொன்னேன். காதில் இருந்த கம்மலை தான் எதிரி கழட்டி சென்றார். நான் சத்தம் போட்ட உடன் எனது மகளும் பேரனும் வந்தார்களா என்றால் வந்தார்கள். அன்று இரவே நடந்த சம்பவத்தை பற்றி சொல்லிவிட்டேன் என்றால் சரிதான். அன்று இரவு யார் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது பேரன் மற்றும் மகளுக்கும் தெரியாது என்றால் சரியல்ல.(சாட்சிபின்னிட்டு எதிரி தான் வந்தார் என சொல்கிறார்). எதிரி கம்மலை கழட்டிய பின்பு நான் சத்தம் போட்ட உடன் பக்கத்து வீட்டார்கள் வந்தார்களா என்றால் எனது மகளும் பேரனும் மட்டும் வந்தார்கள். நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 57/2026**

வழக்கு சாட்சி எண். PW6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சக்திவேல் | கிராமம் | : | அரூர் |
| தந்தை பெயர் | : | செல்வம் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 36 | மாவட்டம் | : | தருமபுரி |

எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28**nd** Day of **July 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது பொன்னாகரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன்.

கடந்த 18.02.2026 ம் தேதியன்று மதியம் சுமார் 1 மணியளவில் நான் அரூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது மோப்பிரிபட்டி கிராமத்தை சேர்ந்த ஜலேந்திரன் மகன் சௌந்ததரராஜன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பரிசீலனை செய்து பார்த்ததில் அதில் முகாந்திரம் இருந்த படியால் அரூர் காவல் நிலைய குற்ற எண் 90/2026 சட்டபிரிவுகள் 331(4), 305(a) BNS ஆக வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ-5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது,**

அன்றை ய தினமே மதியம் சுமார் 14 மணியளவில் சம்பவஇடம் சென்று சாட்சிகள் முருகன் மற்றும் செல்வம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **பார்வை மகசர் ஏற்கனவே அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரிவரைபடம் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அன்றைய தினமே சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கின் எதிரியை தேடிச் சென்ற போது அசா-1 மற்றும் 5 கூறிய அடையளங்களான மஞ்சள் நிற சட்டையும், முழுக்கை பணியன் மற்றும கட்டம் போட்ட லுங்கி அணிந்த ஒரு நபர் தன்னுடைய கடைக்கு துணி சலவை செய்வார் என்று சொன்னதன் பேரிலும், எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரிலும் ஆஜர் எதிரியை செல்வம் செங்கல் சூலையில் கைது செய்து விசாரித்த போது அவர் தான் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அன்றைய தினமே மாலை சுமார் 04.10 மணியளவில் சாட்சிகள் ஜெனகன் மற்றும் பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் எந்த வித உரிமை மீறலோ ஆசை வார்த்தைகளோ எந்த வித வற்புறுத்தலும் இன்றி எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதியான **" என்னை அழைத்து சென்றால் நான் ------------ பாட்டி வீட்டையும் பாட்டியையும் அடையாளம் காட்டுவேன் என்ற பகுதி அசாஆ-7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

அன்றை தினமே சாட்சிகள் 5 மற்றும 6 ஐ தனிதனியாக விசாரணை செய்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் திருடிய நகையை தன்னுடைய கிழிந்த லுங்கியில் வைத்து எடுத்து கொண்ட போது தவறி விழுந்து விட்டது என்று சொன்னார். அவர் வந்த பாதைகளை தேடிச் சென்று பார்த்த போது எந்த நகையும் கிடைக்கவில்லை. அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

எனவே அத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிதென்னரசுக்கு எதிராக ச.பி 331(4), 305(a) BNS படி 01.03.2026ம் தேதியன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடமானது அரூர் - ஊத்தங்கரையின் பிரதான சாலை என்றால் சரிதான். அது போக்கு வரத்து மிகுந்த சாலை என்றால் சரிதான். ஆனால் சம்பவ நேரத்தில் அதிகமா வாகனம் செல்ல வாய்ப்பில்லை. பாதிக்கப்பட்டவர் சத்தம் போட்டு இருந்தால் அருகில் இருப்பவர்களுக்கு கேட்டு இருக்கும் என்றால் அப்போது கதவு மூடப்பட்டு இருந்ததாக பாதிக்கப்பட்ட நபர் என்னிடம் சொன்னார். இதை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. பாதிக்கப்பட்ட நபரான அசா-5 ன் வாக்குமூலத்தை நான் தான் காவல் நிலையத்தில் பதிவுசெய்தேன். இவ்வழக்கின் அனைத்து ஆவணங்களும் சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட விவரங்களை வைத்து காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம். இவ்வழக்கின் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அசா-1 ன் 18.2.2026 காலை 8 மணிக்கு புகார் கொடுத்தாக சொல்லியுள்ளார் என்றால் மதியம் சுமார் 1 மணியளவில் கொடுத்தார். அசா-2 வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், 11 மணிளவில் தான் போலீசார் என்னை விசாரணை செய்தாகவும், அவர் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் இருந்தது என்றும் தெரியாது என்றும், அசா- கேட்டு கொண்டதன் பேரில் சாட்சியம் அளிப்பதாக

சொல்லிள்ளார் என்றால் நான் வழக்கின் விவரங்களை விவரித்த பின் தான் வாக்குமூலம் பதிவு செய்தேன். அசா-4 வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாது என்று சொல்லியுள்ளார்என்றால் வழக்கின் விவரங்களை விவரித்த பின் தான் வாக்குமூலம் பதிவு செய்தேன. பாதிக்கப்பட்ட நபர் அசா-5 என்றால் சரிதான். அசா-5 தன்னுடைய முதல் விசாரணையில் எதிரி தன்னுடைய நெஞ்சின் மீது அமர்ந்து துணியால் வாயை மூடி, காதில் இருந்த கம்மலை திருடியதாக சொல்லியுள்ளார் என்றால் என்னிடம் எவ்வாறு எதுவும் சொல்லவில்லை. அசா-5 எதிரி சிவப்பு நிற உடை அணிந்து இருந்ததாக சொல்லியுள்ளார் என்றும் ஆனால் ஆவணங்களில் மஞ்சல் நிறம் என சொல்லியுள்ளார் என்றால் வயது மூப்பின் காரணமாகவும் எதிரி அந்த சமயத்தில் அணிந்து இருந்த சட்டையில் உள்ள சிவப்பு நிற கோடுகளால் அவ்வாறு சொல்லியிருக்கலாம். சம்பவ நடந்த நேரம் இருட்டாக இருந்தது என்று சொல்லியுள்ளார் என்றால் அந்த அறையில் எப்போதும் ஒரு மின்விளக்கு எரிந்து கொண்டு இருப்பதாக சொன்னார். நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், சாட்சிகள் யாரையும் விசாரிக்காமலும், வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்திலே தயார் செய்து எதிரி மீது தவறான குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**